'ரசபுடீன்' கையில் சிக்கிய பாஞ்சாலத்தின் பரதவிப்பு

அந்தராத்மாவுடன் உரையாடுவதாகக் கூறும் அக்கிரமக்காரனின் அடாத செய்கை

மந்திரிகள் தாயத்து அணிந்து மண்டியிடுகின்றனர்

—(0)—

நாள், நட்சத்திரம் பார்த்து பார்காவா மந்திரிசபை அமைத்தாராம்!

"வகுப்பு வெறியில் சிக்கிச் சீரழிந்துள்ள கிழக்குப் பஞ்சாப் மக்கள், ஊழல் நிறைந்த காங்கிரஸ் மந்திரி சபையின் ஆட்சியால் மட்டும் நசுக்கப்படவில்லை. அந்தராத்மாவுடன் நேருக்கு நேர் உரையாடுகிறேன், என்று கூறும் மதப் பித்தன் நியாய சர்மா என்பவனின் ஆன்மீக ஆட்சியாலும் அவர்கள் அல்லலுற்றுக் கிடக்கிறார்கள்" என்று "பிளிட்ஸ்" எனும் பிரபல ஆங்கில வார இதழின் பிரத்தியேக நிருபர், தோழர் ஜி.கெ. ரெட்டி அவ்விதழின் வாயிலாக அறிவிக்கிறார்.

கான்பூரில் தம்முடைய தெய்வீகத் தன்மையை விலையாக்கமுயன்ற தோழர் சர்மா, அங்கே தம்முடைய சரக்கு விலையாகாததனால், மதவெறி மலிந்துள்ள கிழக்குப் பஞ்சாபில் சென்று, தம் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்தார். இந்தப் பேர்வழியின் உதவிகொண்டு தான் பீம்சன்சச்சார் மந்திரி சபை, டாக்டர். கோபிச் சந் பர்காவ வால் கவிழ்க்கப்பட்டது.

சச்சார் மந்திரிசபை ஆட்டங்கண்டிருப்பதை யறிந்த சர்மா ஒரு குறிப்பிட்ட தேதியில் அதைக் கவிழ்த்துவிடுவதாக டாக்டர் பர்ச்சாவிடம் கூறினார். ஏதோ திடீர் சம்பவங்களின்படி உண்மையிலேயே அவ்வாறு நடந்தது.

சர்மாவின் 'தீர்க்க தரிசனம்' பலித்துவிட்ட காரணத்தால் டாக்டர். பார்கவா, சர்மாவைக் கடவுளென்றே கருதிவிட்டார்! அதன் விளைவு இப்பேர்வழியின் சம்மதமும் ஆசியும் இல்லாமல் எந்த வேலையைப்பற்றியும் பார்கவா மந்திரிசபை முடிவு செய்வதில்லை.

நான் சரியாக இல்லை!

சச்சார் மந்திரிசபை ராஜிநாமாச் செய்த பிறகு பார்கவா மந்திரிசபை உடனே நிறுவப்படவில்லை. கவர்னர் பல முறை இதைக் கண்டித்துப் பேசியும் பலன் கிடைக்கவில்லை. காரணம், 'நட்சத்திர பலன்' சரியாக இல்லையென்று வர்மா கூறித்தடுத்ததுதான்! 'முப்பதுமுக்கோடி தேவர்களையும், நாற்பத்தொண்ணாயிர ரிஷிகளையும், கின்னரா கிம்புருஷர்...?' ஆகியவர்களையெல்லாம்சர்மாகலந்து ஆலோசித்து பார்கவா மந்திரி சபைக்கு ஆபத்தில்லாத ஒருநாளைக் கணித்த பின்புதான், வரவு செலவுத் திட்டம் சட்டசபையில் கொண்டுவரப்பட்டது.

தாயத்து செய்து கொடுத்தார்!

எதிர்க் கட்சியினர் மாந்திரீகம் உபயோகித்துத் தீங்கு செய்வதைத் தடுக்க, தாயத்துகள் செய்து பார்கவா மந்திரி சபை அங்கத்தினர்கள் அணிந்து கொள்ள சர்மா கொடுத்தாராம்! 'பார்கவா' வீட்டில் சர்மா, சடாமுனி போல் மோனநிலையில் உட்கார்ந்திருப்பதும், அவரைச் சுற்றி மந்திரிகள், யோகி ஏதாவது கூறப்போகிறாரென்று ஆவலுடன் 'ஹநுமான் குரங்குகள்' போன்று உட்கார்ந்திருப்பதும், பார்ப்பதற்கே மிக வேடிக்கையாக இருக்கிறது.

சர்மா ஆடம்பர வாழ்க்கை நடத்துகிறார், அவரைக்காண

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

'பாவ்டாய் அரசாங்கத்திடம் மக்கள் நம்பிக்கை இல்லை'

ஒரு மந்திரியும் இரண்டு செயலாளர்களும் வெளியேறினர்

சைகோன், மார்ச். 26—

தற்காப்பு இலாகா மந்திரியும், அயல் நாட்டு இலாகா. யுவர்கள் இலாகா காரியதரிசிகளும், பாவ்டாய் அரசாங்கத்திலிருந்து நேற்று விலகிக் கொண்டார்கள். மேலும் பலர் மந்திரிசபையை விட்டு வெளியேறுவார்களென்றும், வேறு அரசாங்கம் அமைக்கப் படுமென்றும் நம்பகமாக அறியப்படுகிறது.

வியட்நாம் மந்திரி சபைத் தலைவரான்களுள்ளபாவ்டாய்க்கு பதவியிலிருந்து விலகிக் கொண்ட இந்த மூன்று மந்திரிகளும் அனுப்பியகடிதத்தில் கூறியதாவது:-

1. வியட்நாம் அரசாங்கம் அரசியல் திட்டம் ஒன்றும் வகுக்கவில்லை.

2. வியட்நாம் மக்கள் இவ்வரசாங்கத்துக்குக் கீழ்படிந்திருக்கவில்லை. இதற்குத் தகுந்த சான்று சைகோனில் மார்ச்சு. 19-ந் தேதி நடந்த கலவரமாகும்!

'ரசபுடீன்' கையில் சிக்கிய பாஞ்சாலத்தின்

Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (28—3—50) ❖ வெளியூர் (29—3—50) [இதழ் 207

யூகோவில் :: :: பொதுத் தேர்தல்

டிட்டோ ஆட்களே போட்டியிட்டனர்

பெல்கிரேட், மார்ச். 27—

நேற்று யூகோஸ்லாவியாவில் பொதுத்தேர்தல் நடைபெற்றதென்றும், 620 ஸ்தானங்களின் அபேட்சகர்களும் டிட்டோவினால் நியமிக்கப் பட்டவர்களேயாதலால், தேர்தல் முடிவு டிட்டோவுக்கு வெற்றி என்பதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்றும் குளோப் நிருபர் அறிவிக்கிறார்.

அடுக்கடுக்காய் - - ஆபத்துகள்

நியூயார்க், மார்ச். 27—

வாஷிங்டனைச் சேர்ந்த மைல்ஸ் லேக் என்ற இடத்தில் வசிக்கும் ஹோவர்ட் மர்மார் என்பவர் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்ற சம்பவங்களின் விளைவாக மரணமடைந்தார்.

ஒருமரம் சாய்ந்து விழுந்ததால் மின்சார சக்தி பாயும் கம்பி அறுந்து டெலிபோன் கம்பிகளுடன் சேர்ந்தது என்றும், டெலிபோன் கம்பிமூலம் மின்சாரம் அறுந்து இவருடைய வீட்டினுள் "காஸ்ட்யூப்" மீது பாய்ந்ததென்று அதன்காரணமாக ஏற்பட்ட வெடி விபத்தில் இவர் மாண்டார் என்றும் கூறப்படுகிறது.

மலேயா கலவரம்

—

ராணுவத்தினர் பலி!

சிங்கப்பூர், மார்ச். 27—

ஜோஹார் எல்லையில் கலாங்டன் என்ற மலேக்காரசேன் பிரதேசத்தில் நடைபெற்ற கலகக்காரர், போலீஸ் கைகலப்பில் 21 மலேயா சோல்ஜர்களும் போலீசாரும் மாண்டனர். 4 பேர் காயமடைந்தனர். 11 பேர் காணப்படவில்லை. கலகக்காரர்கள் சுமார் 200 பேர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

— — —

ஸிரியாவுக்கு ரெடிமேட் வீடுகள்

டமாஸ்கஸ், மார்ச். 27—

ஸிரியாவுக்கு ரெடிமேட்வீடுகளை சப்ளை செய்வதாக ஒரு அமெரிக்க கம்பெனி ஒப்புக்கொண்டிருக்கிறதென்று வாஷிங்டனிலுள்ள ஸிரிய ஸ்தானிகாலயத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸிரிய சர்க்கார் 150 ரெடிமேட் வீடுகளை வாங்க உத்தேசித்திருக்கிறது.

— — —

பறக்கும் தட்டு ரகசியம் வெளியாகிறது'

அணுக்குண்டின் ஒரு அம்சமாம்!

லண்டன், மார்ச். 27—

'பறக்கும் தட்டுகள்' வீண் பிரமை என்று கருதுவது தவறு என்றும், அணுதிட்டத்துடன் அது சம்பந்தப் பட்டதென்றும், யுனைடெட்ஸ்டேட்ஸிலிருந்தும் இதாலியிலிருந்தும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இதுபற்றி யுனைடெட் ஸ்டேட்ஸ் செனெட்டர் கிளிண்டன் ஆண்டாஸன் கூறுகையில், இப்பறக்கும் தட்டுகள்விஷயமாக மெக்ஸிகோவில் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றனவென்றும், அது அணுசக்தி திட்டத்தின் ஒரு அம்சம் என்று, தான் நினைப்பதாகக் கூறியிருக்கிறார்.

ரோமிலிருந்து டர்போ-ஜெட் நிபுணர் 'புரபஸர் கிஸப் பெலூஸோ என்பவர் அறிவித்திருப்பதாவது:—

1942-லேயே ஜெர்மானியர்களும், இதாலியர்களும் இதைஉபயோகிக்க ஆரம்பித்தனர். பாஸிஸ்ட் பொருளாதார மந்திரியாக நானே இதைத் தயாரிக்கும் திட்டத்திற்காக உழைத்திருக்கிறேன். இந்தத்தட்டுகள் மெல்லிய உலோகத்தினால் செய்யப் பட்டவை. இதன் சுற்றளவு 30-அடி இவைகளில் வெடிகுண்டு வைத்து அனுப்பவே உத்தேசிக்கப்பட்டது இது 'ஜெட்'டினால் ஓட்டப்படுகிறது.

இப்பொழுது இதன்மூலம் அணுசக்தியைப் பிரயோகித்து தாக்க முடியுமா என்பதை ஏதோ ஒரு பெரிய வல்லரசு ஆராய்ச்சி நடத்தி வருகிறது என்று, தான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

— —

கட்சி விவகாரங்களை வெளியிடாதே!

பீரட், மார்ச். 27—

ஸிரியதேசியக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி இவைகளைப்பற்றியோ இக்கட்சிகள் விஷயமாக நடைபெறும் விசாரணைகளைக்குறித்தோ, எவ்வித அபிப்பிராயங்களையும் வெளியில் பத்திரிகைகள் பிரசுரிக்கலாகாது என்று லெபனீஸ் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

ஜெர்மன் விமானங்களை சுட்டு வீழ்த்திய விமானி

பீரட், மார்ச். 27—

யுத்தத்தின்போது 21 ஜெர்மன் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியவரும், சண்டையில் தன் இரு கால்களை இழந்தவரும், ஷெல் பெட்ரோலியம்கம்பெனியில் வேலை செய்பவருமான விமானி கேப்டன் டக்ளஸ் பேடர் தன் கம்பெனியின் அலுவலாக இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

ஜப்பானைவிட்டு அமெரிக்கர்களை கிளப்புவதே ரஷ்ய உத்தேசம்

டோக்கியோ, மார்ச். 27—

ரஷ்ய தூண்டுதலின் பேரில் ஜப்பானிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி அமெரிக்கர்கள் வெளியேறவேண்டும் என்ற கோஷத்தைக் கிளப்பி வருகிறது. இத்துடன் மட்டுமின்றி குரைல் தீவுகளைக் கொடுத்து விடுவதாக ரஷ்யா ஏற்கனவே ஜப்பானை தாஜா செய்ய முயற்சித்திருக்கிறது.

—குளோப்

மூலிகைகளை உற்பத்தி செய்ய சென்னை சர்க்கார் முயற்சி

—(0)—

அமிஞ்சிகரைக் கருகில் பயிரிடத் திட்டம்

சென்னை, மார்ச். 27—

மூலிகைகள், பச்சிலைகள் இவைகளை அதிகமாக உற்பத்தி செய்வதற்காக, அமிஞ்சிகரை அருகாமையில் 10 ஏகர் நிலத்தை வாங்க சென்னை சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த ஆட்சியில் இந்திய மருந்துகளில் ஆராய்ச்சி நடத்தவும், அவைகளை அபிவிருத்தியடையச் செய்யவும் சர்க்கார் போட்டுள்ள திட்டத்தின் ஒரு அம்சமே இந்த ஏற்பாடு.

இந்திய வைத்திய கல்லூரி, பள்ளிக்கூடக் காம்பவுண்டில் சுமார் 300 விதமான மூலிகைகள், பச்சிலைகள் இப்பொழுது பயிரிடப்பட்டு வருகின்றன. இவ்வகளில் 6 வித மூலிகைகள் தவிர மற்றவை இந்நாட்டில் பயிராவதேயாகும். அமிஞ்சிகரை நிலத்தில் இன்னும் பல ரக மூலிகைகள் உற்பத்தி செய்யப்படும் என்று தெரியவருகிறது.

இந்திய வைத்திய கல்லூரி, பள்ளி இவைகளில் படிக்கும் மாணவர்கள் இம்மூலிகைகளை நேரில் அறிந்து ஆராய்வதற்கும், அவைகளின் தராதரங்களை அறிவதற்கும், மூலிகைகளைக் கொண்டு மருந்துகள் தயாரிப்பதற்கும் வசதி செய்து தரவே இந்த ஏற்பாடு என்று கூறப்படுகிறது.

இத்துடன் இந்திய வைத்திய கல்லூரியைச்சேர்ந்த ஆஸ்பத்திரிக்கான மருந்துகளும் தயாரித்து சப்ளை செய்யப்படுமாம். பொதுமக்கள் சிகிச்சைக்கு இம்மருந்து இலவசமாக உதவப்படும் என்றும், இனி இன்னும் அதிகமாகக் கொடுக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

மாலை மணி

சென்னை 28—3—50 செவ்வாய்க்கிழமை

வழக்கு வாபஸ்!

"உறுப்பினர் எனது மசோதாவை ஆதரித்துப் பேசியிருப்பினும், அது நிறைவேறாது என்பதை அறிந்தே மசோதாவை வாபஸ் பெற்றுக் கொள்ளுகிறேன்"

"கள்ளமார்க்கெட்காரர்களைத் தூக்கில் போடவேண்டும்" என்று, அன்றொரு நாள் வீரமுழக்கம் செய்த பண்டித நேருவை முதல் அமைச்சராகக் கொண்ட சுதந்திர ஆட்சியில், கள்ளமார்க்கெட்காரர்களுக்குத் தூக்குத்தண்டனை, அல்லது ஆயுள் தண்டனை அளிக்கப்பட வேண்டும், என்பதை வலியுறுத்தும் மசோதா ஒன்றைக் கொண்டுவந்து, அதனை நிறைவேற்ற முடியாத நிலையில் தோழர் கே. டி. ஷா என்பவர் தனது மசோதாவை—அவசியமான மசோதாவை வாபஸ் பெற்றுக்கொள்ளும் போது, உளம் நொந்து பேசிய பேச்சின் சுருக்கம்தான் மேலே தரப்பட்டிருப்பது.

ஆதரவு நிறைய இருக்கிறது. ஆனால், அது நிறைவேற மார்க்கமில்லை!

என்ன விந்தை! ஜனநாயக ஆட்சியில், உறுப்பினர் அனைவரின் ஆதரவு இருந்தும் ஒரு மசோதா நிறைவேற வழியில்லை! அதுவும், சமுதாய விரோதிகளாகத்திகழும் கள்ள மார்க்கெட்காரர்களை, வரி கொடாது அரசியலாரை ஏமாற்றும் எத்தர்களை ஒழித்துக்கட்டும் ஒரு மசோதா நிறைவேற வழியில்லை என்றால், இந்த ஆட்சிமுறையின் அடிப்படையிலே எத்துணை யதேச்சாதிகாரத் தன்மை இடம் பெற்றுள்ளது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்போர், அன்று மாற்றுக்கட்சியினராகத் திகழ்ந்தபோது எதை எதை வெறுத்துக் கண்டித்துப் பேசினரோ, அவற்றையெல்லாம் இன்று ஆறத்தழுவும்நிலையில் உள்ளனர். இதனைத் தோழர் ஷா சுட்டிக் காட்டியுள்ளார் தனது பேச்சில். ஆனால், அந்தப் பேச்சு கண்டனமாக இல்லாமல், கலக்கமாக இருப்பது தான் வருந்தத்தக்க விஷயம்.

கள்ள மார்க்கெட்காரர்களைத் தூக்கிலிடவேண்டும் என்பது அவரது புரட்சி உள்ளத்தில் தோன்றிய எண்ணம். ஆனால், ஆட்சியாளரின் யதேச்சாதிகாரப் போக்கு, அந்தப் புரட்சி மனப்பான்மையையும் புதையுண்டுபோகச்செய்து விட்டது நான்குமணி நேர வாதத்துக்குப் பிறகும் அவர் வெற்றி காண முடியாமற்போயிற்று. சமுதாயவிரோதிகள்மீது தான் தொடுத்தப் போரைத்தானே அடக்கிவிடும் அளவுக்கு வளைந்து கொடுத்துவிட்டார்—இல்லை—வளைக்கப்பட்டார்.

கள்ள மார்க்கெட்காரர்கள் சமுதாயத்தை சீர்குலையச்செய்யும் புல்லுருவிகளாகையால், அவர்களுக்கு எவ்வளவு கொடுந்தண்டனை கொடுக்கப்பட்டாலும், அதற்காக யாரும் கண்ணீர் சிந்தத்தேவையில்லை என்பது தோழர் ஷாவின் வாதம். ஆனால், சமுதாயத்தைச் சீர்திருத்தி, உய்விக்கவந்த வர்களெனத் தம்மைப் பற்றி அல்லும் பகலும் பறைசாற்றித்திரியும் 'உத்தமர்களை'க் கொண்ட ஆட்சிமன்றம், இதே சமுதாயப் புல்லுருவிகளுக்குத் தருவதாகச் சொல்லும் தண்டனை, 7 ஆண்டு சிறைத்தண்டனையாம்!

தூக்குத்தண்டனை தரப்பட வேண்டிய குற்றம் எனப் பண்டித நேருவால் கருத, அன்று கருதப்பட்ட குற்றத்துக்கு ஏழு ஆண்டு தண்டனையே ஏற்றது என்று கருதப்படும் அளவுக்கு தரம் குறைந்து விட்டது இன்றைய நீதி முறை!

தனது மசோதா பற்றி பேசியபோது தோழர் ஷா "இந்தக்கயவர்கள் இதுகாறும் தங்கு தடையின்றி நாட்டில் நடமாடி, நல்ல பெயரும் பெற்றுவிட்டார்கள். ஆயிரக் கணக்கில் அல்லது லட்சகணக்கில் லஞ்சம் கொடுத்து, தமது புன்செயல்களை மறைத்துப் புகழ்பெற்றுவிட்டனர்" என்று கூறியுள்ளார். இப்படிப்பட்டக் கயவர்களிடம்தான் தாட்சண்ணியம் காட்டுகிறது நமது சர்க்கார்!

'லாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள், தாங்கள் லாபம் அடைவதோடு மாத்திரம் நில்லாமல் நேரடியாகவோ மறைமுகமாகவோ பிறரைச் சுரண்டுவதும், ஒடுக்குவதும் ஆன கொடுமைகளைச் செய்கிறார்கள்."

என்றும் கூறுகிறார் தோழர் ஷா. தோழர் ஷாவின் இந்தக் குற்றச்சாட்டை அடிப்படையாகக்கொண்டு சற்று ஆராய்ந்து பார்த்தால், இன்றைய ஆட்சியாளரை ஏன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தக்கூடாது, என்றுதான் நினைக்கவேண்டியிருக்கும். எப்படியெனில், தோழர் குறிப்பிடுவதுபோல் கொள்ளை லாபக்காரர்களால் மக்கள் சுரண்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட சுரண்டல்காரர்களுக்குத்தக்க தண்டனை தரவேண்டியது ஆட்சியாளர் கடன். ஆட்சியாளர் இந்தக் கடமையைச் செய்யத் தவறினால், கொள்ளைக்காரர்கள் மக்களைச் சுரண்ட இடங்கொடுத்தவர்களாவார்கள். சுரண்டலுக்கு இடங்கொடுப்பது ஜனநாயக சர்க்கார் செய்யக்கூடிய செயலாகாது. எனவே, செய்யக்கூடாத ஒன்றைச் செய்யும் குற்றம் இயல்பாகவே இந்த ஆட்சியாளரைச் சாரும். அதாவது ஆட்சியாளர் குற்றவாளிகளாகவே கருதப்படுவர் மக்கள்மன்றத்திலே.

ஆட்சியாளர் மீது வீண்பழி சுமத்தவேண்டும் என்பதல்ல நமது நோக்கம். தோழர் ஷா குறிப்பிட்டதுபோல் அன்று எதிர்முகாமிலிருந்த போது கூடாதவை, குற்றமுள்ளவை என வெறுத்தொதுக்கிய சிலவற்றைப்பற்றி இத்துணை அலட்சிய மனப்பான்மை கொள்வது, நல்லாட்சியாளர் செயலாகாது என்பதை விளக்கவே இவற்றை எடுத்துக் காட்டி, கண்டிக்கவும் வேண்டியவர்களாகிறோம்.

இங்ஙனம், ஆட்சியாளரின் முன்னுக்குப்பின் முரண்பட்ட, சொல்லொன்று செயலொன்றாய் நடக்கும் போக்கிற்கு எடுத்துக்காட்டுகள் தர வேண்டுமானால், எத்தனையோ காட்டலாம். அடக்குமுறைகளைப்பற்றியவரை அன்று வெள்ளையர் செய்ததைவிட அதிகமான கொடுமைகளைச் செய்கின்றனர் இந்த சுதந்திர வீரர்கள் என்றால் அது மிகையாகாது. இதுபோல் இன்றும் பலப்பல உண்டு. ஆனால் விரிவஞ்சி இத்துடன் விடுத்து மேலே செல்வோம்.

மற்றத் துறைகள் எப்படி இருந்தபோதிலும், நீதி பரிபாலனத்துறை செம்மையாக அமையவேண்டும். நாட்டில் குற்றங்கள் குறையவேண்டும், அல்லது மறையவேண்டும் என்று கருதினால், குற்றத்துக்குரிய தண்டனை வழங்கும் விஷயத்தில் அரசாங்கம் நடுநிலை வகிக்கவேண்டும். எக்காரணம் பற்றியும் ஓரவஞ்சனை செய்தல் கூடவே கூடாது.

கள்ளமார்க்கெட்காரர்களுக்குத் தூக்குத்தண்டனையே தக்க தண்டனை என்பது நாமோ, அல்லது தோழர் ஷாவோ சொன்னதல்ல. பண்டித நேருவே திருவாய் மலர்ந்தருளியதாகும். அப்படிப்பட்ட திருவாக்கே மாறிவிடுகிறது—தோழர் ஷாவின் மசோதா, வாபஸ் வாங்கும்படி செய்யப்படுகிறது என்றால், இதனை ஓர வஞ்சனை என்றே சொல்லவேண்டியவர்களாக இருக்கிறோம். அதுமட்டுமல்ல, ஓர வஞ்சனை ஆட்சிமுறை, நிலைபெற்று நிற்க இயலாது என்பதையும் ஆட்சியாளருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தோழர் ஷா தனது மசோதாவை வாபஸ் வாங்கிக் கொண்டது— அல்ல —வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி செய்தது தங்களுக்கோர் வெற்றி என்று எண்ணி, பணமூட்டைகள் அல்லது ஷாவின் அகராதிப்படி சமுதாயவிரோதிகள் இன்பூது எய்தக்கூடும். அரசியலாரும், பணமூட்டைகளின் பகைமைக்குத்தாம் ஆளாகாமல் தப்பிவிட்டோம் என ஓரளவு திருப்தி கொள்ளலாம். ஆனால், இந்த மகிழ்ச்சியும் திருப்தியும் ஆபத்தானது—நிலைத்து நிற்காதது என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறோம்.

சுருங்கச் சொல்லவேண்டுமானால், தோழர் ஷாவின் மசோதா வாபஸ் வாங்கப்பட்டது, கள்ளமார்க்கெட்டுக்காரர்களின் வெற்றியென்றே சொல்லவேண்டும். அதுமட்டுமல்ல, தோழர் ஷாவின் மசோதா சமுதாயவிரோதிகள் மீது தொடுக்கப்பட்ட ஒரு வழக்கு என்று சொன்னாலும் மிகையாகாது. அப்படிப்பட்ட மசோதா வாபஸ் வாங்கப்பட்டது என்றால், ஷா தொடுத்த வழக்கு வாபஸ் ஆயிற்று என்றே சொல்லவேண்டும். விடுதலை வீரர்களின் ஆட்சியில் கள்ள மார்க்கெட்காரர்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வழக்கு வாபஸாகிறது என்றால், இந்த ஆட்சியைப்பற்றி என்ன சொல்லுவதென்றே புரியவில்லை. இந்த ஆட்சியில் இம்மாதிரி வாபஸ் படலங்கள் இன்னும் எத்தனை நிகழ இருக்கின்றனவோ!

அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி நினைவு வாரம்

திராவிட முன்னேற்றக்கழகம் எந்த இலட்சியத்திற்காக நாட்டில் பாடுபட்டு வருகிறதோ, அந்த இலட்சியத்திற்காகவே பாடுபட்டு, இறுதிவரையில் கொள்கையை விட்டுக்கொடுக்காது உழைத்து, மறைந்த மாவீரர் — **அஞ்சாநெஞ்சன் அழகர்சாமியின் நினைவுநாள்** மார்ச் 28-ந் நாளாகிறது. அந்த நாளை முதலாகக்கொண்ட ஒரு வார காலத்தை, அதாவது 28—3—50 முதல் 3—4—50 வரை உள்ள வாரத்தை 'அஞ்சாநெஞ்சன் அழகர்சாமியின் நினைவு வாரமாகக்" கொண்டாடும்படி கிளைக் கழகங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

செய்யவேண்டிய செயல்கள்:-

1. கழகக் கட்டிடத்தில் கொடியேற்றுவித்தல்.
2. அழகர்சாமியின் உருவப் படங்களைப்பொது இடங்களில் கட்டுதல் —அச்சடித்துப் பலருக்கும் கொடுத்தல்.
3. அழகர்சாமியின் வாழ்க்கை வரலாற்றைத் துண்டு வெளியீடுகள் மூலம் வெளியிடுதல்.
4. பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவுகளின் மூலம் வீர வணக்கம் செலுத்துதல்.

சி. என். அண்ணுதுரை
பொதுச்செயலாளர்
தி. மு. கழகம்

'ரசபுடீன்' கையில் சிக்கிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதவி வேட்டைக்காரர்கள் வந்தபடியே இருக்கிறார்கள். ஜில்லாபோர்டு தேர்தலில் போட்டியிடுதல், உயர்ந்த அதிகாரிகளைமாற்றுதல், ஆகிய எல்லாம் இவரைக் கேட்டுத் தான் செய்ய வேண்டும்.

யாருக்காவது அரசாங்கத்தில் ஏதாவது வேலையாக வேண்டுமானால், சர்மாவிடம் ஒரு சீட்டு பெற்றுக்கொண்டு போகவேண்டியதுதான் தாமதம்! இவரிடம் வருபவர்களில் பெரும்பாலோர் கள்ள மார்க்கெட் வியாபாரிகளும், அனுமதியின்றி பொருள் இறக்குமதி செய்பவரும், ஸ்டீல் பெர்மிட்டுகள் வைத்துக்கொண்டிருப்பவர்களும் தான். தங்கள் மேலுள்ள வழக்குகளை ரத்து செய்துவிடவேண்டுமென்பதே சர்மாவுக்கு அவர்கள் செய்யும் பிரார்த்தனை!

சர்மாவின் செய்கை கிழக்கு பஞ்சாபில் எங்கும் பேச்சாகிவிட்டது. மாகாண சட்டசபையிலேயே ஒரு எதிர்கட்சி அங்கத்தினர் சர்மாவைத் தாக்கிப் பேசினார். சர்மா போன்ற ஒரு பெரியாரை' உதாசினமாகப் பேசுவதைத் தான் அனுமதிக்க முடியாதென்று கோபாவேசத்துடன் டாக்டர் பார்கவா கதறினார். ஒரு தனிப்பட்ட நபரால் பிரதமர் ஆட்டுவிக்கப்படுவதைக் கண்டித்து எழுதிய சில செய்தித்தாள்கள் பலமாக எச்சரிக்கப்பட்டுள்ளன! சர்மாவின் பெரும் புகழும் கிழக்குப் பஞ்சாபுக்கு அடுத்துள்ள பாட்டியாலாவிலும் பரவி வருகிறது.

'கிழக்குப் பஞ்சாப் மந்திரிகள், வீடுகள் விற்கவோ வாங்கவோ சர்மாவின் ஆதரவைத் தான் நாடுகிறார்கள். ஒரு பஞ்சாப் கிராமத்தில் திரளான செல்வம் புதைபட்டுக் கிடக்கிறதென்றும், அதைக் காத்து நிற்கும் பேய் ஓட்டப்பட்டபின் அதை எடுத்துக்கொள்ளலாமென்று சர்மா சமீபத்தில் கூறினார். மந்திரிகள் புதைபொருள் உள்ள நிலத்தை வாங்கிக்கொள்ளப் போட்டியிட்டார்கள். சர்மா திறமைசாலியாகையால், எந்த ஊரென்றுமட்டும் யாரிடமும் கூறவில்லை. தன்னிடம் அதிக உண்மையாக யார் நடந்து கொள்கிறாரோ அவருக்குத் தன் ரகசியத்தைக் கூறப்போவதாக சர்மா கூறிவிட்டார்.

சிற்றூரொன்றில் பிறந்த சர்மா ஆங்கிலம் படித்து, அதன் மூலம் 'காலட்சேபம்' நடத்தலாமென்று நினைத்தார். அது செல்லுபடியாகாத காரணத்தால் சமஸ்கிருதமும், சோதிடமும் கற்று டில்லியில் வயிற்றுப் பிழைப்புக்கு வழியற்றுத் திரிந்த பின், பிரிதிவி சிங் என்னும் பேர்வழி கண்ணில் பட்டார். பீம்சிங் சச்சார் மந்திரி சபையைக் கவிழ்க்க பார்க்கவாவுக்கு உதவஇவரை பிரிதிவிசிங் சிம்லாவுக்கு 'அழைத்துச் சென்றார்' இன்று வரை அந்த சர்மா 'ராஜயோகி'யாக வாழ்ந்துவருகிறார்!

'மனிதன்' நாடகம்

சென்னை, மார்ச். 27—நாடகக் கழகத்தின் இரண்டாவது நாடகமாகிய 'மனிதன்' டி. கெ. எஸ். நாடக சபையாரால் காங்கிரஸ் மைதானத்தில் நேற்றுமாலை திறம்பட நடிக்கப்பட்டது. கட்டணம் மிக்குறைவானதால் நான்காயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இச்சீர்திருத்த நாடகத்தைக் கண்டு களித்தனர்.

தோழர் டி. கெ. சண்முகம் பொதுமக்கள் ஆதரவுக்காக நன்றி தெரிவித்துக்கொண்டார்.

துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்?

லண்டன், மார்ச். 27—யுனைடெட் ஸ்டேட்டிலிருந்து அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளுக்கு ஆயுத உதவி வராமல் தடுக்க முனைந்துள்ள கம்யூனிஸ்டுகள், பிரிட்டிஷ் துறைமுகத் தொழிலாளர்களை ஸ்டிரைக் செய்யும்படி தூண்டி வருவதாகத் தெரிகிறது. ஆனால் இதில் அவர்கள் வெற்றி பெறுவார்களென்று தெரியவில்லை.